Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 05    [21-10-1993]    வியாழக்கிழமை    ஓசை 245

## தமிழீழ சட்டத்தரணிகளுக்கு புதிய சம்பளத்திட்டம் அறிவிப்பு

தமிழீழ நீதி மன்றங்களில் வழக்குப்பேச உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட சட்டத்தரணிகள் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைய புதிய சம்பளத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நேற்று யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்ற சட்டத்தரணிகள், உறுதி எழுதும் நொத்தாரிசு ஆகியோருக்கான கூட்டத்தில் கருத்துக்கூறிய நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்தார். திரு பரா அங்கு கருத்துக்கூறுகையில் "எமது நீதிமன்றங்களில் வழக்குப்பேச உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட சட்டத்தரணிகள் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கட்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் ரோந்துசென்ற சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை 7-45 மணியளவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது அகோர பீரங்கித் தாக்குதல் (4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை வினாத்தாள்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மூன்று பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் நேற்று கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டது

சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சை உதவி ஆசிரியர் தொலைக்கல்வி பரீ (4ஆம் பக்கம் பார்க்க)

### ('யாழ்தேவி' ராணுவ நடவடிக்கை தோல்வி)

# தகவல் வெளியிட்ட செய்தியாளருக்கு ராணுவத்தால் கொலை மிரட்டல்

[கொழும்பு]

யாழ்தேவி இராணுவநடவடிக்கை தோல்வியில் முடிவடைந்து விட்டதாக எழுதிய கொழும்பு பத்திரிகைகள் மீது இராணுவம் பெரும் ஆத்திரம் கொண்டுள்ளது. இதன் காரணமாக, யாழ்தேவி நடவடிக்கையின் போது இராணுவம்பெரும் ஆட்சேதத்தையும் தளபாட இழப்பையும் சந்தித்ததாகவும் தமது குறிக்கோள் நிறைவேறாது இராணுவம் திரும்பியதாகவும் எழுதிய பத்திரிகையாளருக்கு இராணுவத் தரப்பால் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

இவ்வகையில் செய்திக் கட்டுரையொன்றை எழுதிய பத்திரிகையாளரை டயர் போட்டு எரிக்கப்போவதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் மிரட்டியுள்ளார். சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் செய்திக்கட்டுரை எழுதிய பத்திரிகையாளரே இவ்வாறு மிரட்டப்பட்டவராவார்.

இக்பால் அதாஸ் என்ற இந்த பத்திரிகையாளர் சண்டே ரைம்ஸில் எழுதிய கட்டுரை வெளியானதைத் தொடர்ந்து இப்பத்திரிகை உரிமையாளருடன் தொடர்பு கொண்ட ஓர் உயர் இராணுவ தளபதி இக்பால் அதாஸை தாம் டயர் போட்டு உயிருடன் எரிக்கப்போவதாக தெரிவித்தாராம்.

இது குறித்து பி. பி. ஸி. மேலும் தகவல் தருகையில்; இந்த ஆண்டின் மாபெரும் இராணுவ நடவடிக்கை என்று கூறப்பட்ட நடவடிக்கை பற்றி இக்பால் இருபக்க கட்டுரை எழுதியிருந்தார். பெரும் வெற்றி என இந்நடவடிக்கையை இராணுவம் கூறிவரும் நேரத்தில் இப்படி ஒரு கட்டுரை வெளியானதை இராணுவம் விரும்பவில்லை. இதுவே இவ் எச்சரிக்கைக்கு காரணம் எனக் குறிப்பிட்டது.

இவ்வாறு மிரட்டிய உயர் இராணுவ தளபதியின் பெயரை இக்பால் அதாஸ் வெளியிட்டுள்ளார். ஆனால் அந்த அதிகாரி இப்போது [4ஆம் பக்கம் பார்க்க]



## 'ராவய' பத்திரிகையில் 'யாழ்தேவி' புகைப்படங்கள்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் அழிவு நடவடிக்கைகள் 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் இராணுவ இழப்புகளையும் சித்திரிக்கும் புகைப் படங்களுடன் 'ராவய'

நடைபெற்ற யாழ் தேவி இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் டாங்கிகள் கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டமை போன்றவற்றின் புகைப்படங்களையும்

## குவேக்கர்ஸ் குழுவினர் யாழ். வந்தடைந்தனர்

## 'லங்காதீப' செய்தியாளர் யாழ். வந்தனர்

லங்காதீப சிங்கள தினசரியைச் சேர்ந்த இரு செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர் ஒருவரும் நேற்று நரோமா கப்பல் மூலம் யாழ் வந்து சேர்ந்தனர். பத்திரிகையாளர் [4ஆம் பக்கம் பார்க்க[

## விவசாயிகள் தினம் இன்று அனுஷ்டிப்பு

அனைத்துலக விவசாயிகள் தினம் இன்றாகும். இத்தினத்தை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் இன்று கொண்டாடுகின்றனர். இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகயாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சி இளம்பரிதியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளரும் கலந்து கொள்கின்றனர் சிறப்புரைகளை கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளையும், கவின்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் நிகழ்த்தவுள்ளனர். இதனைத் தொடர்ந்து இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியும். அதிக உற்பத்தியை கையளித்ததற்காக தெரிவு செய்யப்பட்ட பனந்தொழில் வல்லுனருக்கான



## லெப்.கேணல்நாயகன் (நரேஸ்)

புலோப்பளையில் கடந்த 29 ம் திகதி நடைபெற்ற சமரில் லெப். கேணல் நாயகன் (நரேஸ்) வீரச்சாவடைந்தார். இவர் முன்னர் மேஜர் என அறிவிக்கப்பட்டிருந்தார்.

லெப். கேணல் நரேஷ் 1985 ஆண்டு காலப்பகுதியில் தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் முழுமையாக இணைத்துக் கொண்டார். பயிற்சியின் பின்னர் உறுதியும் ஆற்றலும் மிக்க போராளியாக திகழ்ந்து 1988ஆம்ஆண்டு இந்திய இராணுவத்துடனான பல மோதல்களில் பங்கெடுத்து பல விழுப்புண்களைப் பெற்றவர். 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் வனப்பாதுகாப்பு பகுதிக்கு பொறுப்பாக இருந்தவர். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் (4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் தேடுதல் 800 தமிழர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் படையினர் இதுவரை மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் கைதான தமிழிளைஞர்களில் 800 பேர் தொடர்ந்து தடுத்துவைக்கப் பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன எனினும் சரியாக எவ்வளவு தொகையானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கூற பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்

இதேசமயம் தெற்கில் தேடுதல் வேட்டையும், சந்தேக நபர்களை கைது செய்தலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என பொலிசார் அறிவித்துள்ளனர்.

**தமிழா!**

இது எம் தாயகம்
நாங்கள் மண்ணுளைந்த பூமியை
எப்படி மாற்றானிடம் கொடுப்பது
எந்தப் படை வந்தாலும் எதிர்கொள்வோம்
சொந்தப் புலிவீரருக்கு துணைநிற்போம்.

கள் தெரிவிக்கின்றன

இவ்வகையில் செய்திக் கட்டுரையொன்றை எழுதிய பத்திரிகையாளரை டயர் போட்டு எரிக்கப்போவதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் மிரட்டியுள்ளார். சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் செய்திக்கட்டுரை எழுதிய பத்திரிகையாளரே இவ்வாறு மிரட்டப்பட்டவராவார்.

இக்பால் அதாஸ் என்ற இந்த பத்திரிகையாளர் சண்டே ரைம்ஸில் எழுதிய கட்டுரை வெளியானதைத் தொடர்ந்து இப்பத்திரிகை உரிமையாளருடன் தொடர்பு கொண்ட ஓர் உயர் இராணுவ தளபதி இக்பால் அதாஸை தாம் டயர் போட்டு உயிருடன் எரிக்கப்போவதாக தெரிவித்தாராம்.

இது குறித்து பி. பி. ஸி. மேலும் தகவல் தருகையில்; இந்த ஆண்டின் மாபெரும் இராணுவ நடவடிக்கை என்று கூறப்பட்ட நடவடிக்கை பற்றி இக்பால் இருபக்க கட்டுரை எழுதியிருந்தார். பெரும் வெற்றி என இந்நடவடிக்கையை இராணுவம் கூறிவரும் நேரத்தில் இப்படி ஒரு கட்டுரை வெளியானதை இராணுவம் விரும்பவில்லை. இதுவே இவ் எச்சரிக்கைக்கு காரணம் எனக் குறிப்பிட்டது.

இவ்வாறு மிரட்டிய உயர் இராணுவ தளபதியின் பெயரை இக்பால் அதாஸ் வெளியிட்டுள்ளார். ஆனால் அந்த அதிகாரி இப்போது [4ஆம் பக்கம் பார்க்க]

## 'ராவய' பத்திரிகையில் 'யாழ்தேவி' புகைப்படங்கள்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் அழிவு நடவடிக்கைகள் 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் இராணுவ இழப்புகளையும் சித்திரிக்கும் புகைப் படங்களுடன் 'ராவய' பத்திரிகை வெளிவந்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் வார இதழான 'ராவய' வின் பத்திரிகைக் குழுவினர் அண்மையில் யாழ் நகர் வந்தது தெரிந்ததே. இவர்கள் கிளாலிப் பகுதியில் நடைபெற்ற யாழ் தேவி இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் டாங்கிகள் கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டமை போன்றவற்றின் புகைப்படங்களையும் சாவகச்சேரியில் புக்காரா நடத்திய அனர்த்தத்தினால் பலியான பொதுமக்களின் உடல்களின் புகைப்படங்கள் என்பனவற்றை நேரடியாக படம் பிடித்துச் சென்றிருந்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

மண்மீட்புப் போருக்கென

## போராளி மகனிடம் மகளை ஒப்படைத்த தந்தை

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோவில் மயிலிட்டி இடம்பெயர்ந்தோர் முகாமில் வதியும் துரைராஜா என்பவர் தனது மகளை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பிலுள்ள தனது மகனிடம் இத்தந்தை தனது மகளை ஒப்படைத்தார்.

போராளியான தனது மகனிடம் தன் மகளை ஒப்டைத்த தந்தை, அடுத்தபடியாக தனது கடைசி மகளுடன் தானும் விடுதலைப் போரில் இணையப்போவதாக தெரிவித்தார்.

''மண் வேண்டுமானால் மக்களை போராட அனுப்பத்தான் வேண்டும்'' என அத்தந்தை மேலும் குறிப்பிட்டார்.

## ஆயுதம் தாங்கியவர்களால் கொழும்பில் இளைஞர் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பில் விசாரணை என்ற பெயரில் இனந்தெரியாத நபர்களினால் இளைஞர்கள் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தலைமை காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருலப்பனை எட்மன்டன் வீதியில் கடந்த ஞாயிறு அதிகாலை மனோரஞ்சன் என்ற இளைஞர் இவ் விதம் ஆயுதம் ஏந்திய இனந்தெரியாத நபர்களினால் விசாரணைக்கென வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இது போன்று பம்பலப்பிட்டியில் இரு இளைஞர்கள் அதே தினம் இனந்தெரியாத நபர்களினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## சுவீடிலுள்ள அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

(கொழும்பு)

சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பியனுப்புவதற்கான சூழ்நிலை இலங்கையில் உள்ளதா என்பதை நேரடியாக அறிய சுவீடன் வெளியுறவு அமைச்சு உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. சுவீடிஷ் வெளியுறவு அமைச்சின் உயரதிகாரியான எப்.ஏ. லாஸ்லாஸன் தலைமையிலான இக் குழுவில் வேறு இருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

புதிதாக சிவில்யுத்தம் நடை (4 ஆம் பக்கம் பார்க்க)

...யாளர்களும் படப்பிடிப்பாளர் ஒருவரும் நேற்று நரோமா கப்பல் மூலம் யாழ் வந்து சேர்ந்தனர். பத்திரிகையாளர் [4ஆம் பக்கம் பார்க்க[

## விவசாயிகள் தினம் இன்று அனுஷ்டிப்பு

அனைத்துலக விவசாயிகள் தினம் இன்றாகும். இத்தினத்தை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் இன்று கொண்டாடுகின்றனர். இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகயாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சி இளம்பரிதியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளரும் கலந்து கொள்கின்றனர் சிறப்புரைகளை கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளையும், கவின்கலைப் பீடாதிபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் நிகழ்த்தவுள்ளனர். இதனைத் தொடர்ந்து இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியும். அதிக உற்பத்தியை கையளித்ததற்காக தெரிவு செய்யப்பட்ட பனந் தொழில் வல்லுனருக்கான ஊக்குவிப்பு பரிசில்களும், காப்புறுதியை முழுமையாகப் பூர் [4ஆம் பக்கம் பார்க்க]

## குவேக்கர்ஸ் குழுவினர் யாழ். வந்தடைந்தனர்

குவேக்கர்ஸ் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். 'வாதுவ' கப்பல் மூலம் வந்த இவர்கள் சமாதான சூழலை உருவாக்குவது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலைக் கழக அனுமதி திட்டமிட்டே வெட்டு

### பல்கலைக் கழக அதிகாரி கருத்து

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திற்கும் புதிய மாணவர் அனுமதியில் திட்டமிட்ட ரீதியில் வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை பல்கலைக்கழகமானியங்கள் குழுவினால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட ஒன்றாகும். இப்பொழுது அறிவிக்கப்பட்ட வெட்டுப் புள்ளியில் மாற்றம் எதனையும் மேற்கொள்வதில் பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழு எதுவித அக்கறையும் கொள்ளவில்லை என யாழ். பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

கடந்த முறை நடைபெற்ற இரண்டு பரீட்சைகளையும் ஒன்றாகக் கருதி வெட்டுப் புள்ளியை நிர்ணயிக்கும்படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை சாதகமாக வைத்தே இத்திட்டமிட்ட வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

[4ஆம் பக்கம் பார்க்க]

# நிர்வாகம் கைக்கு வரும்வரை உயர் கல்விப் பிரச்சினை தீராது

### பாதிக்கப்பட்ட மாணவர் கூட்டத்தில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழகம் என்று எமது நிர்வாகத்தின் கீழ் முழுமையாக வருகின்றதோ அதன் பின்பு தான் தமிழ் மாணவர்களுக்கு விடிவு கிடைக்கும். ஆனால் சிறிலங்கா அரசின் இந்த அதிகாரம் எமது கைக்கு வரும்வரைக்கும் உயர் கல்வியில் தமிழ் மக்கள் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுவார்கள் இந்தப் பிரச்சினையும் தீராது.

இவ்வாறு நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற 91/92ஆம் கல்வி ஆண்டில் வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பெற்றோர் ஒருவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 1972ஆம் ஆண்டில் தரப்படுதல் மூலம் இந்தப் பிரச்சினை ஆரம்பமாகியது. இதனை அடிப்படையாக வைத்தே எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியது. சிங்களவர் ஒருபோதும் தாமாக முன்வந்து எமது பிரச்சினையைத் தீர்க்கப்போவதுமில்லை. அப்படி தீர்த்து வைக்க அவர்கள் ஒருபோதும் விரும்புவதுமில்லை எனவே எமது பிரச்சினையை

[4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சங்கீத வகுப்பு

யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவின் சங்கீத வகுப்புக்களுக்குப் புதிய மாணவர்கள் விஜய தசமியன்று 24-10.93 ஞாயிறு பிற்பகல் 2மணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

வாய்ப் பாட்டு, வயலின், மிருதங்கம் நடனம் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பம் முதல் ஆசிரிய தரா தரம் வரை நடைபெறும் (6329)

### 30 Model Essays

T. Thuraisingham & K. Balasingam விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. [சி/7733]

### தவறிவிட்டது

கடந்த 2. 10. 93 அன்று பளைக்கும் மிருசுவிலுக்கும் இடையில் ஆற்றங்கரை ஒரமாக மோகன் [மோகன் கூல்பார் பளை] என்பவரின் 15000/- பெறுமதியான பொருள்கள் தவறிவிட்டன. இதனைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து பளை மோகன் கூல்பாரில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-7744)

### தவறிவிட்டது

19-10-93 அன்று கோண்டாவில் —கே. கே. எஸ் வீதிக்கிடையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் (H A 02-1345572 HA 02E-1345622) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (6338)

### விற்பனையாகிறது

நவராத்திரியை முன்னிட்டு விற்பனையாகிறது. நவராத்திரி தோத்திரப் பாமாலை வித்துவான் சி. குமாரசாமி B. A. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை விலை20/- மட்டும் (சி-7731)

### ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு4 பரீட்சை [புலமைப் பரிசில் 1994] தொடர் பரீட்சை 13 வது 23-10-93 சனி மு. ப. 8 00, மு. ப. 11-00 நடைபெறும் வினாத் தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [6340]

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கல்லூரியுடன் இணைந்து நடாத்தும்

## கல்லூரி நிறுவுநர் தினம்

காலம்:- 24. 10. 1993 ஞாயிறு
நேரம்:- பி. ப. 3. 00 மணி
இடம்:- குமாரசுவாமி மண்டபம்

நிறுவுநர் நினைவுரை:
கலாநிதி கந்தையா குணராஜா
பிரதேசச் செயலர் - யாழ்நகர்

''தமிழர் பாரம்பரிய பிரதேச நில அபிவிருத்தியும் குடியேற்றத் திட்டங்களும்''

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

(சி-7743)

---

## பணிமனை உதவியாளர் தேவை

புலோலி வணிகர் சங்க எல்லைக்குள் வசிக்கும் 10-ம் ஆண்டுவரை கல்விகற்றவரும், நல்ல கையெழுத்துள்ளவரும், தேகாரோக்கியமானவரும் 30 வயதுக்குட்பட்டவருமான இருபாலாரும் 24-10-93 ஞாயிறு பி, ப. 2-00 மணிக்கு நற்சான்றிதழ்களுடன் மந்திகையிலுள்ள பணிமனைக்கு நேரில் சமூகமளிக்கவும். திறமைக்கேற்ற வேதனம் வழங்கப்படும்.

புலோலி வணிகர் சங்கம்
புலோலி.
19-10-1993

பதில் செயலாளர்.

(6334)

---

## பிரிவுபசாரமும் சேவை நலம் பாராட்டுவிழாவும்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின்
அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம்

சேவையிலிருந்து ஒய்வு பெறுவதையொட்டி கல்லூரியின் பழைய மாணவர்களால் தேநீர் விருந்து வழங்கி சிறப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இடம்: பருத்தித்துறை வை. எம்.சி ஏ. மண்டபம்
காலம்: 06-11-1993 சனிக்கிழமை பி.ப. 4 மணி

இத்தேநீர் விருந்துபசாரத்தில் கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ள அழைப்பதோடு 25-10-1993க்கு முன்னராக விழா இணைச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

---

## வகுப்புத்தொழிலாளிபோல் நடித்த பட்டதாரி ஆசிரியர் திருடினார்

(தென்மராட்சி)

கிளாலிப் பயணிகளிடம் பணம் நகை ஆகியவற்றை திருடிய இருவர் தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த 7-ம் திகதி ஆலங்கேணியிலிருந்துகிளாலி நோக்கி வந்த வயோதிப மாதுவுடன் வந்த பட்டதாரி ஆசிரியர் ஒருவர் தான் ஒரு வகுப்புத்தொழிலாளிபோல் நடித்து, அவரிடமிருந்த 78 ஆயிரம் ரூபா பணத்தையும் தங்கச் சங்கிலியையும் அபகரித்து சென்றபோது சந்தேகத்தின் பேரில் பளை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, நீதிமன்றம் இவருக்கு அபராதமாக 1000 ரூபாவும் வழக்குச் செலவாக 10 ஆயிரம் ரூபாவையும் செலுத்துமாறு தீர்ப்பளித்தது.

இதேபோல் கிளாலியில் 34 ஆயிரம் ரூபாவை பையுடன் திருடிய ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து 1000 ரூபா அபராதமும் 2000 ரூபாவை வழக்குச் செலவாக வழங்குமாறும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது

---

## கொழும்பில் இருந்து சைக்கிள்பெற முயற்சி

(தொல்புரம்)

தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் கடமை யாற்றும் ஊழியர்கள் சைக்கிள்களை கொழும்பிலிருந்து பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றும் 55 ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் தங்களுக்கு கொழும்பிலிருந்து சைக்கிள்களைப் பெற்றுத் தருமாறு கோரி, யாழ் பிரதேச சுகாதாரப் பணிப்பாளருக்குமகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (41)

---

## நீங்கா நினைவுகள்

ஆண்டு ஒன்று — திங்கள் ஒன்று





| திரு. தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரம் | | திருமதி அன்னபூரணி நடராசபிள்ளை |
|---|---|---|
| 1926-05-26 | உதயம் | 1919-04-28 |
| 1992-11-09 | மறைவு | 1993-09-21 |

பொங்கும் வளவன்னி
ஓங்குகுரல் நீயாகி
தங்கும் தனிப்புகழை
தாங்கி நெடிதுயர்ந்தாய்
- தம்பி

மங்களமேயாகி
என்மனைதுலங்கும் மாதரசி
இங்கெனையே தனியவிட்டு
திங்களொன்றாயாகியது

சங்கம்மலி கடல்போற் சஞ்சலத்தே ஆடுமுளம் என்றுமில்லை
நீங்கள் எண்ணமுடியவில்லை இனித்துயரோ தீர்வதில்லை.

---

## மருத்துவ உபகரணங்கள் வாதுவவில் வரவில்லை

யாழ். போதனா வைத்திய சாலைக்கு பிரித்தானிய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி என்பன இறுதி நேரத்தில் வாதுவ கப்பலில் ஏற்றப்படவில்லை என தெரியவருகின்றது.

மேற்படி பொருள்களை ஏற்றுவதில் சில தொழில் நுட்பப் பிரச்சினைகள் எழுந்ததை அடுத்து அவை ஏற்றப்படவில்லையாம். (பா)

## வின்சர் தியேட்டரைத் திருத்த 500 கூரைத் தகடுகள் வந்தன

### உணவுக் களஞ்சியமாக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினரால்உணவுக் களஞ்சியமாக்கப்படவுள்ள யாழ். வின்சர் தியேட்டரைத் திருத்துவதற்கு சுமார்500 கூரைத்தகடுகள் எடுத்துவரப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம்மாலைபருத்தித்துறைதுறைமுகத்தைவந்தடைந்த ''வாதுவ'' கப்பலிலேயே இவை எடுத்துவரப் பட்டன.

மேலும்இக்கப்பலில் 450 துவிச்சக்கரவண்டிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிக்கான உதிரிப்பாகங்கள், 1000 மெற்றிக் தொன் மா, சுமார் 400 பரல் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், பால்மா, சர்க்கரை, சீனி, அவல், என்பன எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்களில் கூடுதலான தொகை பொருள்கள் தனியார் துறையினருக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. [பா]

---

### பனம் விதைகள் நடப்படுகிறது

(வடமராட்சி)

வடமராட்சி தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வல்லைப் பகுதியிலும் குடத்தனை ராஜன் நகரிலும்பனம் வித்துக்களை நாட்டிவருகின்றனர். வல்லையில் 10 ஆயிரம் வித்துக்களும் ராஜன் நகரில் 5 ஆயிரம் வித்துக்களும் நாட்டப்பட்டு வருகின்றன. (யோ)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-10-21

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு - விசுவமடுப்பகுதியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த-

**தவநாதன்** (மாசிலாமணி கிருஷ்ணதாஸ் - பன்குளம்-திருமலை)

**கிளியன்** (சுப்பிரமணியம் தனபாலசிங்கம் - விசுவமடு-முல்லைத்தீவு)

1987ஆம் ஆண்டு யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-திருமலை மாவட்டத் தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமான-

**லெப். கேணல் சந்தோசம்** (கணபதிப்பிள்ளை உமைநேசன்-103, சந்தோசம்வீதி, அரியாலை)

யாழ் - பல்கலைக்கழகத்திற்கு அண்மிய பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லிங்கேஸ்** (மகாலிங்கம் லிங்கேஸ்வரன் - உரும்பராய் தெற்கு - யாழ்)

யாழ் - காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். குட்டி** (மகாலிங்கம் ஜெயவர்த்தனா-நாயன்மார்கட்டு, நல்லூர் - யாழ்)

யாழ் - மருத்துவமனைக்குள் புகுந்த இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட பல தமிழர்கள்.

உரும்பராயில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 சிறுவர்கள் உட்பட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு - கல்லடிப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சா

யத்தில் ஒப்படைக்கவும், சன் மானம் வழங்கப்படும்.

(6338)

## விற்பனையாகிறது

நவராத்திரியை முன்னிட்டு விற்பனையாகிறது. நவராத் திரி தோத்திரப் பாமாலை வித்துவான் சி. குமாரசாமி B. A. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை விலை20/- மட்டும் (சி-7731)

## ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு4 பரீட்சை [புலமைப் பரிசில் 1994] தொடர் பரீட்சை 13 வது 23-10-93 சனி மு. ப. 8 00, மு. ப. 11-00 நடைபெறும் வினாத் தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்பு களும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[6340]

குடும்ப அட்டை

## மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்திலுள்ள மேசன், மேசன்கூலி, வர்ணம் பூசுவோர் ஆகியோர் நலன் கருதி அவர்களதுகுடும்ப அட் டைகள் அங்கத்தவ அட்டை கள்கடந்த சில காலமாக மீள் பரிசீலனை செய்யப்பட்டு வரு கின்றன.

அதேபோல் யாழ் கிளை 10 இன் மீளாய்வுகள் இன்று முதல் 31-ம் திகதி வரைஅவ ரவர் இல்லங்களுக்கு நேரில் சென்று மீளாய்வு செய்யப்ப டவுள்ளன அத்துடன்அடுத்த மாதம் 7-ம் திகதி பொதுக் கூட்டம் நடைபெற்று அதில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் பின்னர் அப்புதிய நிர்வாகத் தின் கீழேயே கிளை 10 இன் நிர்வாகம் செயற்படுமெனவும் நேற்று நடைபெற்ற கலந்து ரையாடலின்போது தீர்மானி க்கப்பட்டது.

## தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

(தொல்புரம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்களில் வாந்திபேதி நோய் பரவாமல் சுகாதாரப் பகுதியினரால் தடுப்பு நடவ டிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

மானிப்பாய் சுகாதாரப் பகுதியினரால் அகதி முகாம் களில் கிணறுகளுக்கு குளோ ரின் மருந்து போடப்பட்டும், மலசல கூடங்களை சுகாதார முறையில் வைத்திருப்பதற் கான ஒழுங்கு முறைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய வட்டா ரங்கள்தெரிவித்துள்ளன.

(14)

---

## பிரிவுபசாரமும் சேவை நலம் பாராட்டுவிழாவும்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின்
அதிபர் திரு. சி. பொ. பாலசிங்கம்

சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி கல்லூரியின் பழைய மாணவர்களால் தேநீர் விருந்து வழங்கி சிறப் பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**இடம்: பருத்தித்துறை வை. எம்.சி ஏ. மண்டபம்**

**காலம்: 06-11-1993 சனிக்கிழமை பி.ப. 4 மணி**


இத்தேநீர் விருந்துபசாரத்தில் கல்லூரியின் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ள அழைப் பதோடு 25-10-1993க்கு முன்னராக விழா இணைச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டு கிறோம்.

பருத்தித்துறை.
19-10-1993

விழாக்குழு சார்பில்
ச. சுந்தரமூர்த்தி,
வ. செல்வராசன்

(6333)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சிவகாமிஅம்மா இராசதுரை**

மலர்வு:
**19-11-1937**

உதிர்வு:
**21-09-1993**

உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

**குடும்பத்தினர்**

பிரேமச்சந்திரன் வீதி ( இராஜகாரியர் வீதி )
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (6339)

---





**திரு.தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரம்** | **திருமதி அன்னபூரணி நடராசபிள்ளை**

| | | |
|---|---|---|
| 1926-05-26 | உதயம் | 1919-04-28 |
| 1992-11-09 | மறைவு | 1993-09-21 |

பொங்கும் வளவன்னி
ஓங்குகுரல் நீயாகி
தங்கும் தனிப்புகழை
தாங்கி நெடிதுயர்ந்தாய்
- தம்பி

மங்களமேயாகி
என்மனைதுலங்கும் மாதரசி
இங்கெனையே தனியவிட்டு
திங்களொன்றாயாகியது

சங்கம்மலி கடல்போற் சஞ்சலத்தே ஆடுமுளம் என்றுமில்லை
நீங்கள் எண்ணமுடியவில்லை இனித்துயரோ தீர்வதில்லை.

அன்பு மனைவியையும் நினைவகலாத் தம்பியையும்
பிரிந்து துயருறும்

**தாமோதரம்பிள்ளை நடராசபிள்ளை**

சஞ்சலமுற்ற மருமக்கள், பிரியசகோதரிக்காக

**மீனாட்சி பத்மநாதன்**

ஊற்றங்கரை,
தண்ணீரூற்று, முள்ளியவளை. (6328)

## நெஞ்சை விட்டு நீங்கா 31-ம்நாள் நினைவலைகள் 21. 10. 1993



மலர்வு:
01- 07- 1978

உதிர்வு:
21- 09- 1993

**குமாரகுலசிங்கம் சிவகுமார்**

[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு பிரிந்து சென்ற அன்புச் செல்வமே! உமது அன்பு சொரியும் உள்ளத்தையும், அறிவு ஆற்றலையும், கள்ளமில்லா உள்ளத்தையும் என்றென்றும் எம் நெஞ்சை விட்டு பிரிக்க முடியாது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை கண்ணீர் பூக்களால் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், அத்தான்மார், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

கலைவாணிவீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (6323)

---

**கிளியன்** (சுப்பிரமணியம் தனபாலசிங்கம் - விசுவமடு- முல்லைத்தீவு)

1987ஆம் ஆண்டு யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

திருமலை மாவட்டத் தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமான-

**லெப். கேணல் சந்தோசம்** (கணபதிப்பிள்ளை உமைநேசன்-103, சந்தோசம்வீதி, அரியாலை)

யாழ் - பல்கலைக்கழகத்திற்கு அண்மிய பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லிங்கேஸ்** (மகாலிங்கம் லிங்கேஸ்வரன் - உரும்பராய் தெற்கு - யாழ்)

யாழ் - காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இந் தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். குட்டி** (மகாலிங்கம் ஜெயவர்த்தனா-நாயன் மார்கட்டு, நல்லூர் - யாழ்)

யாழ் - மருத்துவமனைக்குள் புகுந்த இந்தியப்படை யினரால் படுகொலை செய்யப்பட்ட மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட பல தமிழர்கள்.

உரும்பராயில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல் லப்பட்ட 03 சிறுவர்கள் உட்பட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு - கல்லடிப் பகுதியில் இந்தி யப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சா வெய்திய-

**2 ம் லெப். திலக்** (யே. குபேந்திரன் - கல்லடி - மட்டு)

மட்டு - கல்லடிப் பகுதியில் இந்தியப்படையினர் பது ங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சா வெய்திய-

**உதயன்** (சி. உதயகுமார் - நாவற்குடா - மட்டு)

ஊர்காவற்துறையில் இந்தியப்படையினரின் துப்பாக் கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**உதயன** (தெய்வேந்திரன் உதயசூரியன்-காரைநகர்-யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**வெங்கட் / செல்வா** (மகேந்திரன் யூட்மரியான் செல்வ ராஜன்-கோவில்வீதி ஒழுங்கையாழ்)

வல்லைவெளியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல் லப்பட்ட நாட்டுப்பற்றாளரான தமிழீழ மக்கள் மன்றத் தலைவரும், மாமனிதருமான-

**க. சிவானந்தசுந்தரம** (பருத்தித்துறை)

1989ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லிங்கம்** (முத்தையா மோகனராஜ் - இட்டம்பிட்டியா மலையகம்)

**முத்து** (......)

1991ஆம் ஆண்டு யாழ் - மண்டைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சா வெய்திய-

**வெப். பேபி** (கந்தையா பஞ்சலிங்கம் - களபூமி, காரை நகர் - யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு - வெல்லாவெளியில் சிறில ங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சா வெய்திய-

**2-ம் லெப் தாமரை** (கந்தப்பர் சிவபாதம் - கோயில் போரதீவு மட்டு)

**ஜீவராஜ் / தினேஸ்** (கந்தசாமி சிவநாயகம் கிரான்குளம் மட்டு]

**அழகேஸ்** [முத்தையா லோகேஸ்வரன்-நுணுகல பதுளை]

யாழ் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணு வத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**செந்தூரன் / செல்வன்** [சிவராசா ஜெகதாசன் - அருண் வீதி, மானிப்பாய் - யாழ்]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7742)

சிந்தனைக்கு

கேட்கச்செவியுள்ளவர்கள் கேட்கட்டும்

—விவிலிய வேதம்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த பெ. எண் - 05

## தொண்டாவின் போதனை

"உன்னால் உதவ முடியாது விட்டாலும், உபத்திரவமாவது கொடாமல் இரு'' இது தமிழ் மக்கள் மத்தியில் பரிச்சயமான ஒரு வாக்கியம். இதனை ஞாபக மூட்டுவதாகவே கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் குறித்து அமைச்சர் தொண்டமான் லண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் நேசன்' பத்திரிகைக் கு வழங்கிய பேட்டி அமைந்துள்ளது.

இப்பேட்டியின் போது கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் பற்றி கேட்டகேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அமைச்சர் தொண்டமான் மூன்று விடயங்களை இக் குழுக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

ஒன்று கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் உரிமைக்காகப் போராடுபவர்களைக் காட்டிக் கொடுப்பதை நிறுத்தவேண்டும் இரண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியல் கட்சிகள் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும். மூன்று போரிடுபவர்களுக்கு எவ் வகையிலும் உதவ வேண்டும் என்பதே அமைச்சர்தொண்டமான் வற்புறுத்திய அம்சங்களாகும்.

திரு. தொண்டமான் சிறிலங்கா அமைச்சரவையில் ஒரு சிரேஷ்ட அமைச்சர். ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர் பிரேமதாசா, டி.பி. விஜேதுங்கா ஆகிய மூன்று ஜனாதிபதிகளின் கீழும் தொடர்ச்சியாக அமைச்சரவையில் இருந்தவர் - இருப்பவர். இந்நிலையில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை என்பதில் சந்தேகமில்லை. இதற்கு அவர் நீண்டகாலமாக சிங்களப் பேரினவாதத்துடன் நடத்திய அரசியலும் காரணமாக இருக்கலாம்.

ஆனால், காரணம் எவ்வாறு இருப்பினும் அமைச்சர் தொண்டமான் தனது கருத்தில் தெளிவாக இருந்துள்ளமை அப்பேட்டியில் காணக் கூடியதாக உள்ளது. இதனை ''எல்லா சிங்கள அரசுகளும் ஒரே மாதிரியானவை தான். ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, பிரேமதாசா அல்லது வேறு எவராயினும் இவர்களிடம் எந்த வித்தியாசமும் இல்லை எந்தவொரு சிங்களத் தலைவர்களும் பிரச்சினைகளை தீர்க்க விரும்பவில்லை'' என அமைச்சர் தொண்டமான் கூறுவதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இதேவேளை, அமைச்சர் தொண்டமானின் இவ் ஆதங்கம், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளை நீண்டகாலமாக அவதானித்ததின் அடிப்படையில் எழுந்ததென்பதில் சந்தேகமில்லை. அதாவது,

## கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நிலை

# தொலைந்துவிட்ட அரசியல் இலக்கால் பணம் தேடுதலே பிரதான குறிக்கோள்!

விடுதலைப்புலிகள் அல்லாத தமிழ்க் குழுக்கள் தமது அரசியல் இருப்பிற்காக இரண்டு விடயங்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது முதலாவதாக சிறிலங்கா அரசாங்கத்தின் கொடையால் ஒரு அரசியல் தீர்வு என்பதில் தங்கியிருக்க வேண்டியது. இரண்டாவது இந்திய அரசாங்கத்தின் தார்மீக ஆதரவைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது. பரிகாசத்துக்கு உரிய அந்த நாட்களில் இந்திய அரசின் முழு அளவிலான ஆதரவைப் பெறும் வகையில் சிறிலங்கா அரசு தீர்வு ஒன்றைக்கொண்டு வரும் என்றே அவர்கள் நம்பியிருந்தனர். ஆனால் இப்போது இவர்கள் இந்திய அரசின் ஆதரவைப் பெறும் நிலையிலோ அல்லது சிறிலங்கா அரசை எதிர்த்துப் போரிட அல்லது பேரம் பேசக் கூடிய நிலையிலோ இல்லை.

எனினும் கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் குழுக்களில் பலவும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

எனது பார்வையில் டக்ளஸ் தேவானந்தா இந்த வகையில் குறிப்பிடத்தக்களவில் முன்னணியில் உள்ளார் பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தின் போது அவர் தேவையான அளவு பணத்தையும், ஏனைய பாதுகாப்புகளையும் பெற்றுக் கொண்டிருந்தார். அவர் தனது இயக்கத்தை கட்டி எழுப்பினார். அவர் ஐ. தே. க. வின் நலன்களுக்காகத் தான் செயற்படுகின்றாரா என்ற கேள்வியே அப்போது எழவில்லை. பணத்தைப்பெற்றுக்கொண்ட அவர் அதனைப் புத்திசாலித்தனமாக முதலீடு செய்துள்ளார்.

அண்மைய எதிர்காலத்தில் வெளியிலிருந்து வரும் தாக்கங்களாலோ அல்லது உள்ளே எழும் பதற்றங்களாலோ தமது குழுபிளவுபட்டுவிடாது இவர்களை ஒரு பொருட்டாக மதிக்காத நிலை மறுபுறம் - நீடிக்க. இவர்களுக்கிடையே இருக்கும் சிலர் தத்தமக்கென சிறுசிறு குழுக்களை வைத்துக் கொண்டு கொழும்பிலும், கிழக்கிலும் இவர்களின் நிழலின் கீழேயே தத்தம் போக்கில் செயற்படுகின்றனர். இதேவேளை விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடும் இவர்களின் ஆர்வத்தைக் கட்டுப்படுத்துவதும் கடினமாக இருக்கின்றது. ஏனெனில் ஆயுதம் ஏந்திய சிறிய குழுவாக தம் மனப்போக்கிற்கேற்ப முன்பு செயற்பட்ட இவர்கள் இப்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட வேண்டியிருக்கின்றது.

இரவோடிரவாக லட்சாதிபதியாகிய சிலரும் கூட இத்தகையோரில் உள்ளனர். அரசியல் இலக்கு தொலைக்கப் பட்டுவிட்ட நிலையிலும், அது பற்றிய எண்ணத்தைக் கைவிட்டு விட்ட நிலையிலும் பணத்தைப் பெறுவது - அதுவும் சுலபமாக பெறுவது என்ற சிந்தனை முதன்மை பெறுவது இயல்பானது. இத்தகையவர்களிடம் பேராசை பிடித்து விடுவதும் அதுபோட்டியிட்டு விஞ்சுவதற்கு உந்துவதும் கதைகள் மூலம் தெரிய வருகின்றது.

முந்திய வருடங்களில் ஆயுதமேந்திப் போராடிய ஒரு குழுவின் உறுப்பினராக இருந்த ஒரு இளைஞன் தனது நண்பர்களுடன் சேர்ந்துசிறு தவறு ஒன்றைச் செய்ததன் மூலம் நூறாயிரக்கணக்கான ரூபாய்களை (அவனது சொந்த மதிப்பீட்டின் படி) தனது குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக செலவிடக் கூடியதாக இருந்திருக்கிறது கொழும்பில் தமது முன்னாள் ஈழம் குழுவிற்காக ஆதரவு தேடிக் கொண்டிருக்கும் ஒருவரை அண்மையில் சந்தித்த போது ''தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் பெரும் துன்பத்தை அனுபவிக்கும் சிலர் கொழும்புக்கு திரும்பி வந்

மேலும் பலரை தமிழ் நாட்டின் அகதி முகாம்களிலிருந்து பெற்றுவர முடியும் என்றும் அவர் தெரிவித்தார். ஆயுதபாணிகளான மெய்ப்பாது காவலர்கள் சகிதம், பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலோடு அவர் கொழும்பு நகரில் காரில் பவனி வருகின்றார். தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் இருண்டு போய்க் கிடக்கிறது என்பது அவருக்கு நன்கு தெரியும். எனினும் அவர் அதுபற்றிக் கவலைப்படவில்லை. காலப் போக்கில் அவர் ஒரு லட்சாதிபதியாகுவார் என்பதுஎனது நம்பிக்கை ஏனெனில் அவரது சிந்தனை தெளிவானது. ஐ. தே கவிற்கு நிபந்தனையற்ற ஆதரவு-இராணுவத்தை திருப்திப்படுத்துவது என்பதுவே அதுவாகும்.

**சண்டே ஐலண்ட் இதழின் 17-10-93 திகதியவெளியீட்டில் கராக்கி எழுதிய கட்டுரையின் மொழியாக்கம்**

கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து சுயலாபத்தைக் கருதி அரசின் அனுசரணையோடு செயற்படுவோருக்கு ஈரோஸ் பிரபாகரன் ஒரு உதாரணம் கொழும்பிலுள்ள ஈரோஸ் குழுவினர் அவரை தமது மட்டக்களப்பு பிரதிநிதியாக நியமித்துள்ளனர். கடந்த வாரத்தில் அவரும் அவரதுசகாவான திருகோணமலைப் பிரதிநிதி சக்திகுமாரும் ஈரோஸின்அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி அரசியல்வேலைகள் செய்வதைக் கைவிட்டு புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடப்போவதாகஅறிவித்தனர். கொழும்பிலிருந்து கொண்டு அரசியலில் முடமாகிப்போவதை விடவும் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தொண்டு செய்வது சிற

உடைப்பதற்கான வேலைகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டுகின்றார். ஆனால் முன்னதாக பசீர்சேகு தாவூத் விரைவில் ஐ. தே. கவுடன் இணையலாம் என்றும், அவருக்குராஜாங்கஅமைச்சர்பதவி வழங்கப்படலாம் என்றும்செய்திகள் அடிபட்டன. எனினும் இது நடக்கப்போவதில்லை. ஏனெனில் அரசாங்கம் அவரது நேர்மையில் சந்தேகம் கொள்ளாத போதும் ஐ. தே.க ஒரு முன்னாள் ஆயுதமேந்திய ஒருவரை அமைச்சராக நியமிப்பதற்கு தயாராக இல்லை.

கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் பணிகள் பற்றி குறிப்பிட்ட சங்கர் ராஜி(ஈரோஸின் தாபக உறுப்பினர்களில் ஒருவர்) புனர்வாழ்வு வேலைகளைக் கவனிக்க அவர்களுக்கு நிதி பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாகத் தெரிவித்தார். எனினும் கொழும்பில் இருக்கும் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்த பலரும் இன்றைய அரசியல் போக்கு குறித்து அநேகமாக தனிப்பட்ட முறையிலாயினும் கவலை கொண்டுள்ளனர். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் நான்கு வருடங்களைக் கழித்து விட்டமை தேசியம் பற்றிய அவர்களது மாயையை இறுதிவரை தள்ளி வந்துவிட்டது

பிரச்சினை இதுதான். இந்தத் தமிழ்க் குழுக்கள் பெரும்பாலும் தனிநாடு ஒன்றிற்காக ஆயுதமேந்திப் போராடுவதை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டவை. ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து இந்த இலக்கை இவை தவிர்த்துக் கொண்டு விட்டன. வடக்கு - கிழக்கு மாகாண அரசு ஒரு விதிவிலக்காக இருந்தபோதும் இவர்களால் வேறு எதையும் அடைய முடியவில்லை

ஈழப் போரட்டத்தின் ஏகபோக உரிமை இப்போது விடுதலைப்புலிகள் வசம் போய்விட்டது. இதுகூட

வதற்கு இடையூறு செய்பவையாகவும் இந்தக் குழுக்கள் இருக்கின்றன வடபகுதியில் அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசிக்கும் பாரிய தாக்குதல்களில் பங்களிப்பதற்கு இந்தக் குழுக்களின் ஆட்பலம் போதாது என்பதுடன், இத்தகைய பாரிய சண்டைக்கான திட்டமிடலின் போதும் இவை பங்குபற்ற முடியாத நிலையே இருக்கின்றது.

கிழக்கை சாந்தப்படுத்தும் படையினரின் முயற்சியும் பிரச்சனைகளையே உருவாக்குகின்றன. ஏனெனில் ஈ. பி. டி. பி உட்பட எந்தவொரு குழுவும், கிழக்கு மாகாணத்திற்கென தனியான நிர்வாக அலகு கொண்டுவரப்படுவதை ஏற்க முடியாத நிலையிலேயே இருக்கின்றன. கிழக்கை சாந்தப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்யில் முதலாவது முக்கிய படியாக இருப்பது கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதேயாகும்' தமிழ்க் குழுக்கள் இதனை வன்மையாக எதிர்க்கின்றன. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தல்களில் தாம் போட்டியிட்டால் சர்வசன வாக்கெடுப்பிற்கான சூழ்நிலை இருப்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்பதாகும். அரசாங்கம் இக் குழுக்கள் தேர்தலில் பங்குபற்ற வேண்டுமென விரும்புகிறது, ஏனெனில் சர்வசன வாக்கெடுப்பிற்கு ஒரு முன்னோடி நடவடிக்கை என்பதுடன் மேற்குலகை திருப்திப்படுத்தவும் இது உதவும் என்பதால், கிழக்கை சாந்தப்படுத்தும் முயற்சியில் தாயகக் கேட்பாடு குறித்து சுலபத்தில் வளையக் கூடிய நிலைக்கு இக்குழுக்களை நிர்ப்பந்திக்க அல்லது அரசின் முயற்சிக்கு ஒத்துப் போகக் கூடிய புதிய குழுக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆர் பிரேமதாசா, டி.பி. விஜேதுங்கா ஆகிய மூன்று ஜனாதிபதிகளின் கீழும் தொடர்ச்சியாக அமைச்சரவையில் இருந்தவர் - இருப்பவர். இந் நிலையில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை என்பதில் சந்தேகமில்லை. இதற்கு அவர் நீண்டகாலமாக சிங்களப் பேரினவாதத்துடன் நடத்திய அரசியலும் காரணமாக இருக்கலாம்.

ஆனால், காரணம் எவ்வாறு இருப்பினும் - அமைச்சர் தொண்டமான் தனது கருத்தில் தெளிவாக இருந்துள்ளமை அப்பேட்டியில் காணக் கூடியதாக உள்ளது. இதனை ''எல்லா சிங்கள அரசுகளும் ஒரே மாதிரியானவை தான். ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, பிரேமதாசா அல்லது வேறு எவராயினும் இவர்களிடம் எந்த வித்தியாசமும் இல்லை எந்தவொரு சிங்களத் தலைவர்களும் பிரச்சினைகளை தீர்க்க விரும்பவில்லை'' என அமைச்சர் தொண்டமான் கூறுவதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இதேவேளை, அமைச்சர் தொண்டமானின் இவ் ஆதங்கம், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளை நீண்டகாலமாக அவதானித்ததின் அடிப்படையில் எழுந்ததென்பதில் சந்தேகமில்லை. அதாவது, சிங்களத் தலைவர்கள் யாவரும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி எனத் தீர்மானித்து விட்ட பின்னரும், தமிழ் குழுக்கள் சிங்கள அரசிற்கு ஏவல் செய்பவர்களாக இருப்பதைக் கண்டே அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்திருக்கக்கூடும்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா ஆகியோர், இலங்கையில் தமிழருக்கு சில பிரச்சினைகள் உண்டு. அதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என முன்னரே தெரிவித்து வந்தனர். இந் நிலையில், தமிழர் பிரச்சினையை ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என்ற ரீதியில் தமிழ்க் குழுக்கள் கூறி வந்த விளக்கம் பேச்சிற்குத் தானும் ஒப்புக் கொள்வதாக இருப்பினும், தற்பொழுது இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை என அரசாங்கம் கைவிரித்து விட்ட நிலையில் இக்குழுக்கள் தமது நிலைப்பாட்டை ஏன் இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை.?

அதாவது, இனப்பிரச்சினை தீர்விற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தடையாக இருப்பதாகக் கூறிக் கொண்டு சிங்களப் பேரினவாதிகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்து வந்த இக் குழுக்கள் பிரச்சினையும் இல்லை, தீர்வும் இல்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டின் பின்னரும் தமது நடவடிக்கையை எதற்காக தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். அதாவது, காட்டிக் கொடுப்பிற்கும், கைதிற்கும் ஏன் இவர்கள் உதவுகின்றார்கள் என்பதே கேள்வியாகும்.

அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டது போன்று, போராடாது விட்டாலும், விடுதலைப் போராளிகளை காட்டிக் கொடுப்பதையாவது கைவிட முடியாதா? சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை மாற்றத்திற்கு ஏற்ப இவர்கள் ஏன் தமது அரசியல் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை? அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டுள்ள மூன்று அம்சங்களில் - காட்டிக் கொடுத்தலை நிறுத்துதல், அரசியலில் இருந்து ஒதுங்குதல், போரிடுபவர்களுக் உதவுதல் - பின் இரண்டையும் கடைப்பிடிக்காவிட்டாலும் இவற்றில் முதலாவதான காட்டிக் கொடுத்தலையாவது இக் குழுக்கள் கைவிடாதது ஏன்?

இதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதம் இது வரை இக் குழுக்களுக்குப் போட்டு வந்த பிச்சை ஆகும். இப்பிச்சை காட்டிக் கொடுப்புகளுக்காகவே ஒழிய தமிழ் இனத்தின் பிரதிநிதிகளாக அவர்கள் ஏற்றுக் கொண்டதினாலல்ல அரசியலில் எதனை விளங்கிக் கொள்ளாது விடினும், தமிழ் குழுக்கள் இதனை தெளிவாக விளங்கிக் கொண்டே இருந்தன. இதன் காரணமாக இனப்பிரச்சினை என்பது இல்லை என சிங்களப் பேரினவாதம் அறிவித்த பின்னும், தமிழ் குழுக்கள் தமது சேவகத்தை நிறுத்தவில்லை. அதாவது, தமக்கு வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்காக எசமானுக்கு தொடர்ந்தும் விசுவாசமாக சேவை புரிகின்றனர்.

இல்லை.

எனது பார்வையில் டக்ளஸ் தேவானந்தா இந்த வகையில் குறிப்பிடத்தக்களவில் முன்னணியில் உள்ளார் பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தின் போது அவர் தேவையான அளவு பணத்தையும், ஏனைய பாதுகாப்புகளையும் பெற்றுக் கொண்டிருந்தார். அவர் தனது இயக்கத்தை கட்டி எழுப்பினார். அவர் ஐ. தே. க. வின் நலன்களுக்காகத் தான் செயற்படுகின்றாரா என்ற கேள்வியே அப்போது எழவில்லை. பணத்தைப்பெற்றுக்கொண்ட அவர் அதனைப் புத்திசாலித்தனமாக முதலீடு செய்துள்ளார்.

அண்மைய எதிர்காலத்தில் வெளியிலிருந்து வரும் தாக்கங்களாலோ அல்லது உள்ளே எழும் பதற்றங்களாலோ தமது குழு பிளவுபட்டுவிடாது என்பதில் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார். வடக்கு — கிழக்கு பீரச்சினை தொடரும் வரையில் ஏனைய குழுக்களைப் போல அரசியல் வரட்சியால் தனது குழு பாதிக்கப்படாமலிருக்க தனது பணம் தன்னைக் காப்பாற்றும் என்று அவர் கருதுகின்றார்.

கொழும்பில் தொடர்ந்து தங்கியிருப்பதன் அர்த்தம் என்ன என்ற கேள்வியே கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களை தற்சமயம் உலுக்கும் கேள்வியாகும். இந்தியா, இவர்களை கைவிட்டுவிட்ட நிலை ஒருபுறம்-பிரேமதாசாவிற்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் பிடித்து விடுவதும் அதுபோட்டியிட்டு விஞ்சுவதற்கு உந்துவதும் கதைகள் மூலம் தெரிய வருகின்றது.

முந்திய வருடங்களில் ஆயுதமேந்திப் போராடிய ஒரு குழுவின் உறுப்பினராக இருந்த ஒரு இளைஞன் தனது நண்பர்களுடன் சேர்ந்துசிறு தவறு ஒன்றைச் செய்ததன் மூலம் நூறாயிரக்கணக்கான ரூபாய்களை (அவனது சொந்த மதிப்பீட்டின் படி) தனது குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக செலவிடக் கூடியதாக இருந்திருக்கிறது கொழும்பில் தமது முன்னாள் ஈழம் குழுவிற்காக ஆதரவு தேடிக் கொண்டிருக்கும் ஒருவரை அண்மையில் சந்தித்போது ''தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் பெரும் துன்பத்தை அனுபவிக்கும் சிலர் கொழும்புக்கு திரும்பி வந்தால் தாமும் டக்ளஸ் போல செல்வாக்குப் பெறலாம் எனக் கருதுகின்றனர்'' எனத் தெரிவித்தார் அத்துடன் முன்பு நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு வடக்கு, கிழக்கின் சில பகுதிகளில் போராடிய தமது குழு இப்போது ஐ. தே. கவிற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கவும் யுத்தத்தில் இராணுவத்திற்கு ஏனைய குழுக்களை விட அதிகளவில் உதவவும் தயாராக இருப்பதாகச் சொன்னார்.

மேலும் தற்போது தம்முடன் சுமார் ஐம்பது பேர் வரையில் இருப்பதாகவும், கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து சுயலாபத்தைக் கருதி அரசின் அனுசரணையோடு செயற்படுவோருக்கு ஈரோஸ் பிரபாகரன் ஒரு உதாரணம் கொழும்பிலுள்ள ஈரோஸ் குழுவினர் அவரை தமது மட்டக்களப்பு பிரதிநிதியாக நியமித்துள்ளனர். கடந்த வாரத்தில் அவரும் அவரதுசகாவான திருகோணமலைப் பிரதிநிதி சக்திகுமாரும் ஈரோஸின்அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி அரசியல்வேலைகள் செய்வதைக் கைவிட்டு புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடப்போவதாகஅறிவித்தனர். கொழும்பிலிருந்து கொண்டு அரசியலில் முடமாகிப்போவதை விடவும் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு தொண்டு செய்வது சிறந்தது என்பது அவர்களது கூற்று ஆகும்.

ஈரோஸின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதியாகவும், கிழக்கிலுள்ள அதன் கிளைகளின் இணைப்பாளராகவும் பொதுவாகச் செயற்படும்சுதாமாஸ்டர் பாராளுமன்ற உறுப்பினரானபசீர் சேகு தாவூத்இப்போதும்ஈரோஸ்பிரபாகரனின் அணியுடனேயே இயங்குவதாகக் கூறுகிறார். ஏனையதமிழ்க் குழுக்களின் தலைவர்களைப் போலவே இராணுவ புலனாய்வு பிரிவினரும், தேசிய புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்தோரும் தமது குழுவை தனித்தனியே நான்கு வருடங்களைக் கழித்து விட்டமை தேசியம் பற்றிய அவர்களது மாயையை இறுதிவரை தள்ளி வந்துவிட்டது

பிரச்சினை இதுதான். இந்தத் தமிழ்க் குழுக்கள் பெரும்பாலும் தனிநாடு ஒன்றிற்காக ஆயுதமேந்திப் போராடுவதை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டவை. ஆனால் ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து இந்த இலக்கை இவை தவிர்த்துக் கொண்டு விட்டன. வடக்கு - கிழக்கு மாகாண அரசு ஒரு விதிவிலக்காக இருந்தபோதும் இவர்களால் வேறு எதையும் அடைய முடியவில்லை

ஈழப் போரட்டத்தின் ஏகபோக உரிமை இப்போது விடுதலைப்புலிகள் வசம் போய்விட்டது. இதுகூட இவர்களின் உறுப்பினர்கள் மத்தியில் ஒரு தளர்ச்சி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் முன்னுரிமையான பணிகள் கூட இதை ஊக்குவிப்பதாகவே உள்ளது. வடக்கில் ஒரு மரபு ரீதியான யுத்தத்தையும், கிழக்கில் மக்களை சாந்தப்படுத்தும் ஒரு அணுகுமுறையையும் கையாண்டு சர்வசன வாக்கெடுப்பின் மூலம் கிழக்கை தக்கவைத்துக் கொள்ளவே அரசாங்கம் விரும்புகின்றது அரசாங்கத்தின் இந்த நோக்கங்களில்முதலாவதற்கு பொருத்தமற்றவையாகவும், இரண்டாவதில் தாம் போட்டியிட்டால் சர்வசன வாக்கெடுப்பிற்கான சூழ்நிலை இருப்பதை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்பதாகும். அரசாங்கம் இக் குழுக்கள் தேர்தலில் பங்குபற்ற வேண்டுமென விரும்புகிறது, ஏனெனில் சர்வசன வாக்கெடுப்பிற்கு ஒரு முன்னோடி நடவடிக்கை என்பதுடன் மேற்குலகை திருப்திப்படுத்தவும் இது உதவும் என்பதால், கிழக்கை சாந்தப்படுத்தும் முயற்சியில் தாயகக் கேட்பாடு குறித்து சுலபத்தில் வளையக் கூடிய நிலைக்கு இக்குழுக்களை நிர்ப்பந்திக்க அல்லது அரசின் முயற்சிக்கு ஒத்துப் போகக் கூடிய புதிய குழுக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே தான் இந்த முன்னைய ஈழம் குழுக்கள் அரசாங்கத்தின் ஆதரவைத்தேட வேண்டிய சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இது பணத்தைப் பெற ஒரு வழியுமாகும். இதனால் புலனாய்வுத்துறை அதிகாரிகளிடையே அரசாங்கத்திற்கான தமது ஆதரவு நிபந்தனைகள் அற்றது என்பதை தெளிவுபடுத்த இந்தக் குழுக்கள் முற்பட்டுள்ளன, இதில் டக்கிளஸ் தேவானந்த முந்திக் கொண்டுள்ளார்.

---

## ஒருதொகுதி மண்ணெய் மாத இறுதியில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு ஒரு தொகுதி மண்ணெண்ணெய்யுடன் 'றுகுணு' கப்பல் இம் மாத இறுதிப் பகுதியில் பருத்தித்துறை வந்து சேரவுள்ளது.

இக்கப்பலில் மண்ணெண்ணெய் ஏற்றும் வேலைகள் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது.

இதனை அடுத்து மற்றொரு தொகுதி மண்ணெண்ணெய் அனுப்பவும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது

மேற்படி தொகுதி மண்ணெண்ணெய்யை இங்கிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு 'குமாரி' கப்பல் சென்றதும் அங்கு வைத்து அதில் ஏற்றி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. [பா]

## ஓராண்டு பூர்த்தி

(கொழும்புத்துறை)

பண்ணிசை வகுப்புஓராண்டு பூர்த்தி விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி தினத்தில் நீராவியடி தோப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும். (24)

## வைத்தியசாலை மரவு இரவில் சேதமாக்கப்படுகிறது

(தொல்புரம்)

தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்திய சாலையில் இரவு வேளைகளில் மரத்தளபாடங்கள் சேதப்படுத்தப்பட்டும் பயன் தரும் மரக்கன்றுகள் களவாடப்பட்டும் வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீரிறைக்கும் இயந்திரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு கமத்தொழில் திணைக்களம் கட்டம் கட்டமாக நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்து விநியோகித்து வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

முற்பணம் கட்டிய விவசாயிகளுக்கே மேற்படி நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலமாக கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய இம்முறை கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட சுமார் 50 நீர் இறைக்கும் இயந்திரங்கள் முற்பணம் கட்டிய விவசாயிகளுக்கு அடுத்த கிழமை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## ஆசிரிய பயிற்சி கலாசாலை வகுப்புகள் பகிஷ்கரிப்பு

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியமாணவர்கள் நேற்றுமுன்தினம்வகுப்புகளை பகிஷ்கரித்தனர், நிர்வாகத்தின்செயல் ஒன்றைக் கண்டித்தேஇம் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரையாண்டு பரீட்சையில் தோற்றத் தவறிய ஆசிரிய மாணவர்களுக்கு இவ் வாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசேட பரீட்சையில் சில ஆசிரியமாணவர்கள் தோற்ற அனுமதிக்காத நிர்வாகத்தின் செயலை கண்டித்தே இவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

இப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையை அடுத்தும் ஆசிரிய மாணவர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை ஆதலால் ஆசிரிய மாணவர்களினால் தொடர்ந்து வகுப்புகள் பகிஷ்கரிக்கப்படும்என்று தெரிவிக்கப்பட்டது (தி)

## உரம், கிருமிநாசினிகள் போதியளவில் இருக்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பெரும் போகப்பயிர்ச் செய்கைக்கு போதுமான அளவு உரம் மற்றும் கிருமி நாசினிகள் என்பன கையிருப்பில் உள்ளதாக தெரியவருகின்றது.

இவற்றை தனியார் துறை அரசு துறைமற்றும் கூட்டுறவுத் துறைகள் என்பன கொள்வனவு செய்து வைத்துள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு மேற்படி துறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## கோழிகளுக்கு தடுப்பு ஊசி

கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் இன்று பிற்பகல் 1-30 மணியளவில் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் ஏற்றப்படவுள்ளன.

## பொருளாதாரத்தடையிங்குபோட்டதனால் விளைச்சல் நிலமிங்கு விளைவைக் குறைத்திடுமா?

அனைத்துலக

## விவசாயிகள் தினம்
## 1993 ஒக்டோபர் 21

இடம்:- இளங்கலைஞர் மன்ற மண்டபம், சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 1993 ஒக்டோபர் 21 இன்று காலை 9 மணி

தேசியக்கொடி ஏற்றல்:
திரு. சி. இளம்பரிதி
(யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)

கூட்டுறவுக் கொடி ஏற்றல்:
திரு. சா. செல்வரத்தினம்
(தலைவர் வடமாகாண ப. தெ. வள அ. கூ. சங்க சமாசம்)

மங்கள விளக்கேற்றல்;
திரு. சி. வேலாயுதம்
(பனை அபி. சபை வழி. நட. குழு உறுப்பினரும், பதில் தலைவரும்)

மௌன அஞ்சலி:
தலைமை உரை:
திரு தி. சபாரத்தினம்
(கூ. அ. உ. ஆணையாளர் ப. தெ. வள, ப. அ. சபை வழி நடத்தல் குழு உறுப்பினரும்)

வரவேற்புரை:
திரு. கி. சிவநேசன்
(பொதுமுகாமையாளர் வடமாகாண சமாசம்)

முதன்மை விருந்தினர்கள் வாழ்த்துரை:
பொறுப்பாளர், யாழ். மாவட்ட அரசியற்துறை
பணிப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்

சிறப்புரை:
பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை,
பேராசிரியர். கா. சிவத்தம்பி.

கலை நிகழ்ச்சி:
இன்னிசை வேந்தா பொன் சுந்தரலிங்கம் பாட்டு
இசைஞான திலகம் வீ. ஆர் ராதாகிருஸ்ணன் வயலின்
எஸ். மகேந்திரம் - மிருதங்கம்
எஸ் துரைராசா - கஞ்சிரா

பரிசில் வழங்கல்;

அ) கூடிய உற்பத்தி வழங்கியமைக்கான கிளை வாரியான போட்டிப் பரிசில்.
ஆ) கமத்தொழில் ஒய்வூதியத் திட்டத்தில் முழுமையாக இணைந்தோருக்கு உறுதிப்பத்திரமும், பரிசில்களும்
இ) ஓய்வூதியத் திட்டத்தில் கூடுதலான அங்கத்தவரை இணைத்துக் கொண்டமைக்கான சங்கங்களுக்கான பரிசில்கள்.

நன்றியுரை: திரு இ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்; பனை அபி. சபை
அமைப்பாளர்

பனை தெ. வள. கூ. நிறுவனமும்,
[சி/7749] பனை அபி. சபையும்.



21 10-1993 இல் மூன்றாம் ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்

### யா / வடமராட்சி
### மத்திய மகளிர் கல்லூரி

வாழிய வாழிய வாழியவே


சுவிடிஸிலுள்ள

பெறும் யூகோஸ்லேவியா சோமாலியா போன்ற நாடுகளிலிருந்து பெருமளவு அகதிகள் சுவீடன் வருவதால் சுவீடிஷ் அரசு பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. இதன் காரணமாகவே அகதிகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சுவீடிஷ் குழு தெரிவித்

எனினும் சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை நாடு திருப்பியனுப்பக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லையென்பதால் இப்போதைக்கு அவ்வாறு செய்யவேண்டாம் என சுவீடிஷ் அரசுக்கு சிபார்சு செய்வதாக சுவீடிஷ் குழுவினர் உறுதியளித்தனர்.

லெப். கேணல்

சிறிலங்கா இராணுவத்துடனான இரண்டாம் கட்டப் போர் ஆரம்பித்த பின் கொக்காவில், மாங்குளம் முகாம் தகர்ப்புகளில் பங்கேற்றவர் அத்தாக்குதலின்போது விழுப்புண்கள் பெற்றார். 1991ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் முல்லை மாவட்ட பொறுப்பாளராக லெப். கேணல் நரேஸ் நியமிக்கப்பட்டார். அப்போது முல்லைத்தீவில் நடந்த மினி முகாம் தகர்ப்பு, காவலரண்தகர்ப்பு, மின்னல் தாக்குதல், ஆ. க. வெ நடவடிக்கை முல்லைத்தீவிலிருந்து அளம்பில் வரை முன்னேற இராணுவம் மேற்கொண்ட ஏழுசக்தி, வன்னி விக்கிரம ஆகியவற்றின் போது முக்கிய பங்கு வகித்தவர். 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி கோட்டச் சிறப்பு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார் 29 09 93 அன்று 'யாழ்தேவி' நடவடிக்கையின்போது இடம் பெற்ற புலோப்பளைச் சமரில் வீரச்சாவை தழுவிக் கொண்டார்

பரீட்சை

ட்சை, ஆங்கில வகுப்பு சுகாதாரப் பரீட்சை ஆகிய பரீட்சைக்கான வினாத்தாள்களே எடுத்து வரப்பட்டன.

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரியினால் 'வாதுவ' கப்பல் மூலம் இப்பரீட்சை வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் எடுத்து வரப்பட்டன (யோ)

பீரங்கி

களை மேற்கொண்டனர். குண்டுகள் குடியிருப்புகள் மீது விழுந்து வெடித்தன.

கடற்படையினர் சற்கோட்டை, திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டதில் சிறு சேதங்கள் ஏற்பட்டன. (யோ)

நிர்வாக

உரிய முறையில் மிகவும் நிதானமாக நாம் அணுகுவதன் மூலமே தீர்த்துக் கொள்ள முடியும். எனவே தற்போது எழுந்துள்ள இந்தப் பிரச்சினையை பாதிக்கப்பட்டமாணவர்களின் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளும் இணைந்து உந்து சக்தியாகஇருந்து செயற்படுவதன் மூலமே இப் பிரச்சினையை முடிவிற்கு கொண்டு வர முடியும் என்றார்.

வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்டோர் ஒருங்கிணைப்புக் குழு கூடி நிர்வாக சபை ஒன்றை ஏகமனதாக தெரிவு செய்தது. இதில் திரு. ஜே. கலைச்செல்வன் தலைவராகவும், திரு. சி. அனுரகுபரன் செயலாளராகவும் திரு. சி. ஜயந்தன் பொருளாளராகவும் தெரிவாகினர்.

இதன்போது பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தத் தமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கி நீதிவழங்குமாறுகோரி சிறிலங்கா ஜனாதிபதி, உயர் கல்வி அமைச்சு ஆகியோருக்கு தனித்தனியே கடிதங்களை அனுப்புவது எனவும் யாழ் குடாநாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நேரில் சென்று தமது பிரச்சினை தொடர்பான விளக்கக் கூட்டங்களை நடாத்தி தமது போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இது இன்று முதல் நடைபெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் நாளை மாலை 3 30 மணிக்கு மீண்டும் கூடி பேரணி நடத்துவது உட்பட அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது.

லங்காதீப

கள் துஷாரா குணரட்ன, கிருஷ்ணா வீஜயபண்டார, படப்பிடிப்பாளர் பிக்குசி ஆகியோரே நேற்று யாழ் வந்த செய்தியாளர்களாவர்.

ராவய

கடந்த ஞாயிறு வெளி வந்த மேற்படி பத்திரிகையில் நான்கு பக்கங்களில் இப்புகைப்படங்களும் சிறிலங்கா படையினரின் அழிவு நடவடிக்கைகளும் ஆதனால் பலியான மக்களின் நிலைகளும் பற்றிய பல கட்டுரைகளும் வெளி வந்துள்ளன.

விவசாயிகள்

த்தி செய்த பனந்தொழில் வல்லுனருக்கான சான்றுப் பத்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

தகவல்

கொழும்பில் இல்லை. அவர் இது குறித்து தனது கருத்து எதையும் கூறவும் இல்லை.

இச் சம்பவத்தை கொழும்பு பத்திரிகையாளர் சங்கம் கண்டித்துள்ளது பத்திரிகையாளர் அதாஸ் இப்பிரச்சினை முடிந்துவிட்டது தமக்கு இப்போ ஆபத்து இல்லை என கூறிய போதிலும் பத்திரிகையாளர் சங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இராணுவ தளபதியின் மிரட்டல் ஓர் அச்சுறுத்தல் தந்திரம் என்று அச் சங்கம் கூறியுள்ளது.

இராணுவம் எந்த அளவிற்கு விமர்சன கருத்தை யார் கூறிலும் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்றது என்பதையே இச் சம்பவம் காட்டுவதாக இது குறித்து கருத்து வெளியிட்ட பி பி. ஸி. யின கொழும்பு செய்தியாளர் குறிப்பிட்டார்.

சண்டே ரைம்ஸ் வெளியிட்ட கட்டுரையை இராணுவ தளபதி லெப் ஜெனரல் சசில் வைத்தியரட்னா அப் பத்திரிகைக்கு அளித்த ஓர் பேட்டியில் கடுமையாக கண்டித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ

தங்களது புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமென கேட்டதற்கமைய நாம் மாற்றங்களைச் செய்துள்ளோம். அதாவது சட்டத்தரணிகள் எவரும் கட்சிக்காரர்களின் சார்பில் இலவசமாக வழக்குப்பேச முடியும். மற்றும்படி நிதி பெறப்படும்போது ரூபா 25 -ல் இருந்து ரூபா 500/- வரை பெற்றுக்கொள்ள முடியும் வழக்குகளின் தரத்திற்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட வரையறைக்குள் (500/-) சட்டத்தரணிகளே கட்சிக்காரர்கள் தரும் தொகையைத் தீர்மானிக்து

பல்கலைக்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு 1180 வெற்றிடங்கள் உள்ள அதேவேளை 408 பேர் மட்டுமே இம்முறை அனுமதிக்கப்பட உள்ளனர். மேலும் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தில் 460 மாணவர்கள் அனுமதிக்கக் கூடியதாக உள்ளபோது 211 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளனர்.

துறைரீதி பாகயாழ். பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவம் 150, வர்த்தகம் 150, கலை 300, பௌதிக விஞ்ஞானம் 230, உயிரியல் விஞ்ஞானம் 100, மருத்துவம் 200, விவசாயம் 50 என மொத்தம் 1180 வெற்றிடங்கள் உள்ளபோது முகாமைத்துவம் 38, வர்த்தகம் 50, கலை 140, பௌதிக விஞ்ஞானம் 50, விவசாயம் 20, உயிரியல் விஞ்ஞானம் 50, மருத்துவம் 60, என மொத்தம் 408 பேர் மட்டுமே இம்முறை அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [05]

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கனகரத்தினம் ம.ம.வி. எதிர் ஏழாலை சிறிமுருகன், புனித ஜேம்ஸ் ஆண்கள் ம. வி. எதிர் ஸ்கந்தவரோதயா கல்லூரி, புனித யோசப் வித்தியாலயம் எதிர் உரும்பராய் இந்துக்கல்லூரி; கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில், யாழ். இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி. இளவாலை மெய்கண்டான் எதிர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, புங்குடுதீவு ம. வி. எதிர் யூனியன் கல்லூரி; மட்டுவில் மைதானத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி எதிர் தேவரையாளி ம வி., றிபேர்க்கல்லூரி எதிர் இமையாணன் அ.த.க. பாடசாலை.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 20.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11298

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9396, 41-9211, 24-6489, 28-7560, 22-6897, 27 6439, 28-1110, 27-5863, 26-7852, 26-0763, 41-9530, 27 0493, 26-8839, 27-0802, 24-7225, 24-3071, 26-0423, 26-9145, 26 2070, 26-3633,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3046, 41 5979, 27-2088, 27-6579, 24 7672, 24-5140, 22-2250, 42-9326, 41-9855, 24-8558, 24-6855, 26-3130

## மரண அறிவித்தல்கள்
### சாந்தலூஸ் பத்தினாதர்
(மயிலிட்டி)

மயிலிட்டியைச் சேர்ந்த சாந்தலூஸ் பத்தினாதர் 19-10-93 அன்று பருத்தித்துறையில் காலமானார். இவர் லூர்த்தம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிங்கராயர் (சம்மாட்டியார்), சின்னக்கோன், பூலோகம், ஆரோக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், றீற்றா, மேரி பற்றிமா, லில்லி யசிந்தா, காலஞ்சென்ற டேவிட், காலஞ்சென்ற கப்டன் அன்பு (அமலராசன்), பீற்றர், புஷ்ப்பம், நோபேட் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோண்பிள்ளை, அமலதாஸ், செல்வி, பவளராணி (ஆசிரியை கலட்டி றோ. க. வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டாக்டர் அல்பிறட் (லண்டன்), டொட்றிக்கோ (பொறியியலாளர், கனடா), பற்றிமா (கனடா), தங்கராசா (கனடா), அன்ரன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும், கெனடி, குமுதா, றொபின்சன், றீகன், மில்ரன், ஜெறோம், கிறிஸ்ரி அசன் போத்தம், அனிதா, விஜி, விக்ரர் அன்பரசி, சுகன்யா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் (20 10-93) புதன்கிழமை பருத்தித்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல்:


யாழ். வர்த்தகர் சங்கத்தால் நடாத்தப்படும்

### வாணிவிழா நிகழ்ச்சிகள்

இடம்: 21, மேல்மாடி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
காலம்: 22 - 10 - 93 வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 12-30 மணி.

நிகழ்ச்சி நிரல்

12-30 — 1-30 மணிவரை கும்பபூசை
1-30 — 2-30 மணிவரை சிறப்புப் பேருரை.

இணைத்துக் கொண்டமைக்கான சங்கங்களுக்கான பரி
சில்கள்.

நன்றியுரை: திரு இ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்; பனை அபி. சபை
அமைப்பாளர்

பனை தெ. வள. கூ. நிறுவனமும்,
பனை அபி. சபையும்.

[சி/7749]

---

21 10-1993 இல் மூன்றாம் ஆண்டில்
காலடி எடுத்து வைக்கும்

## யா / வடமராட்சி
## மத்திய மகளிர் கல்லூரி

வாழிய வாழிய வாழியவே
வையகம் எழில்பெற வாழியவே
வடமராட்சி மலர் மத்திய மகளிர்
திருவளர் கல்லூரி வாழியவே

என வாழ்த்துகிறோம்.

**ஆண்டு 12 வர்த்தக கலைப் பிரிவு மாணவர்கள்.**

(5858)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை ரமணி / தமிழினியன்**

[புருஷோத்மன் குமாரசந்திரன்]

பிறப்பு: 12- 07- 1972
இறப்பு: 21- 09- 1993

திருமலை ஈன்றெடுத்த திருமகனே
தரணியிலே உதிர்ந்து விட்ட வீரமகனே
தவிக்கின்றோம் உன் பிரிவால்
தயங்காமல் அடி தொடர்வோம்
தமிழினத்தின் விடிவிற்காய்.

சிவன் வீதி,
சாவகச்சேரி.
(6341)
குடும்பத்தினர், உறவினர்
நண்பர்கள்.

---

பரீட்சை
ட்சை, ஆங்கில வகுப்புசுகாதாரப் பரீட்சை ஆகிய பரீட்சைக்கான வினாத்தாள்களே எடுத்து வரப்பட்டன.

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரியினால் 'வாதுவ' கப்பல் மூலம் இப்பரீட்சை வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் எடுத்து வரப்பட்டன (யோ)

தமது போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இது இன்று முதல் நடைபெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் நாளை மாலை 3 30 மணிக்கு மீண்டும் கூடி பேரணி நடத்துவது உட்பட அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது.

---

யாழ். வர்த்தகர் சங்கத்தால் நடாத்தப்படும்

## வாணிவிழா நிகழ்ச்சிகள்

**இடம்: 21, மேல்மாடி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.**
**காலம்: 22 - 10 - 93 வெள்ளிக்கிழமை**
**நேரம்: பிற்பகல் 12-30 மணி.**

**நிகழ்ச்சி நிரல்**

12-30 — 1-30 மணிவரை கும்பபூசை
1-30 — 2-30 மணிவரை சிறப்புப் பேருரை.
(அருள்மொழிச் செல்வர், பைந்தமிழ்ப் பாவலன் செந்தமிழ்ச் செம்மல், சொற்பேராழி லாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.)
2-30 — 3-30 மணிவரை
நாச்சிமார் கோவிலடி ஜெயராமன் குழுவினரின் வயலின்சோலோ
சங்கீத கலாவித்தகர் ஜி. கண்ணதாசன்
மிருதங்கம் செல்வன் எஸ். நாகராஜன்
தபேலா செல்வன் எஸ். வேல்மாறன்
முகர்சிங் செல்வன் எல். கேதீஸ்வரன்
3-30 — 4-30 மணிவரை
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு
4-30 — 5 30 மணிவரை
பார்வதி சிவபாதம் அவர்களின் பாட்டுக் கச்சேரி

சகலதுறை வர்த்தகர்களையும், ஊழியர்களையும், பொதுமக்களையும் தவறாது கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். வர்த்தகர் சங்கம்
21, மேல்மாடி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்
(6342)

---

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
நெல்லியடி, கரவெட்டி

## கேள்வி அறிவித்தல்-1994

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், பைசிக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 1994ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1994ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிவரை குத்தகைக்கு விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 03-11-1993 முற்பகல் 10. 00 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அவ்வவ் உப-அலுவலக பொறுப்பதிகாரிகளால் 01-11-1993ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

மேலும் கேள்விகள் தொடர்பாக மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாஸன்
விசேட ஆணையாளர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி, 15-10-1993
(சி-7747)

---

ட்ட கட்டுரையை இராணுவ தளபதி லெப் ஜெனரல் சசில் வைத்தியரட்னா அப் பத்திரிகைக்கு அளித்த ஓர் பேட்டியில் கடுமையாக கண்டித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

---

தமிழீழ
தங்களது புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமென கேட்டதற்கமைய நாம் மாற்றங்களைச் செய்துள்ளோம். அதாவது சட்டத்தரணிகள் எவரும் கட்சிக்காரர்களின் சார்பில் இலவசமாக வழக்குப்பேச முடியும். மற்றும்படி நிதி பெறப்படும்போது ரூபா25 -ல் இருந்து ரூபா 500/- வரை பெற்றுக்கொள்ள முடியும் வழக்குகளின் தரத்திற்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட வரையறைக்குள் (500/-) சட்டத்தரணிகளே கட்சிக்காரர்கள் தரும் தொகையைத் தீர்மானித்து நீதிமன்றப் பதிவாளருக்கு தெரியப்படுத்தும் போது நீதிமன்றம் அக் கட்சிக்காரரிடம் இருந்து அப்பணத்தை அறவிட்டுக் கொடுக்கும்.

இது 01- 11- 93ல் இருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது. 01- 11- 93 ஆம் திகதியில் இருந்து உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொண்ட சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும் காணி உறுதிகள் எழுதமுடியும் என்று கூறப்பட்டது. இவை பற்றிய விபரங்கள் யாவும் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

''இன்று நெருக்கடி நிலைதான். ஆயினும் மக்கள் பலர் தங்களுக்கு எழுதப்பட்ட உறுதிகள் தமது கைக்குக் கிடைக்கவில்லை. கிடைக்க ஒழுங்கு செய்யும்படி கேட்கின்றனர். அதுமட்டுமின்றி காணி மாற்றம் செய்யும் பெருந்தொகைப் பதிவுப்பணம் இப்பகுதியிலேயே செலவிடப்பட வேண்டும். இங்கு 1987 ஆம் ஆண்டிற்குப் பிறகு இங்கே பெறப்பட்ட பணம் மாநகர சபைகளுக்கு வழங்கப்படவில்லை''யென அவர் எடுத்துக்கூறினார்.

இது விடயமாக அரசாங்க அதிபர், காணிஆணையாளர், மாநகர நகரசபை ஆணையாளர்கள் இணைந்து இப்பணம் இங்கே பெறப்பட வழி செய்யப்பட வேண்டுமென்றும் சட்டத்தரணிகள் எடுத்துக் கூறினர். சட்டத்தரணிகள், நொத்தாரிசு ஆகியோர் உறுதிகள் எழுதியவுடன் அதற்குரிய பணத்தைச் செலுத்தி அவ்வுறுதிகள் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அரச அதிகாரிகள், சட்டத்தரணிகள் இணைந்த கூட்டம் கூட்டப்படுவது நல்லதென்றும் சிலர் எடுத்துக் கூறினர்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் பாலகு உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

---

## ந்தலூஸ் பத்தினாதர்

(மயிலிட்டி)

மயிலிட்டியைச் சேர்ந்த சாந்தலூஸ் பத்தினாதர் 19-10-93 அன்று பருத்தித்துறையில் காலமானார். இவர் லூர்த்தம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிங்கராயர் (சம்மாட்டியார்), சின்னக்கோன், பூலோகம், ஆரோக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், றீற்றா, மேரி பற்றிமா, லில்லி யசிந்தா, காலஞ்சென்ற டேவிட், காலஞ்சென்ற கப்டன் அன்பு (அமலராசன்), பீற்றர், புஷ்ப்பம், நோபேட் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோண்பிள்ளை, அமலதாஸ், செல்வி, பவளராணி (ஆசிரியை கலட்டி றோ. க. வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டாக்டர் அல்பிறட் (லண்டன்), டொட்றிக்கோ (பொறியியலாளர், கனடா), பற்றிமா (கனடா), தங்கராசா (கனடா), அன்ரன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும், கெனடி, குமுதா, றொபின்சன், றீகன், மில்ரன், ஜெறோம், கிறிஸ்ரி அசன் போத்தம், அனிதா, விஜி, விக்ரர் அன்பரசி, சுகன்யா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் (20 10-93) புதன்கிழமை பருத்தித்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
பீற்றர்
(மகன்)

சின்னத்தோட்டம்
கடற்கரை வீதி,
பருத்தித்துறை
(6337)

---

## திரு. பொன்னையா செல்வராசா

(ஆசிரியர் யா/ தம்பசிட்டி மெ. மி. பாடசாலை)

அல்வாய் வடக்கைச் சேர்ந்த திரு பொன்னையா செல்வராசா ஆசிரியர் (யா/தம்பசிட்டி மெ. மி பாடசாலை) 16-10 93 சனி அன்று காலமாகிவிட்டார். இவர் ஸ்ரீபவாதேவியின் அன்புக் கணவரும் திருமதி இ. சுமதி, சூரியகுமார் (நோர்வே), சாந்தகுமார் (கனடா), ஆகியோரது அன்புத் தந்தையும் து. இராஜகரனின் மாமனாரும், துளசியின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை (21-10 93) வியாழன் இன்று மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

கொட்டடி வளவு,
அல்வாய் வடக்கு
அல்வாய்.
[7446]

---

## கந்தையா பாலசுப்பிரமணியம்

(சின்னத்தம்பி

(முன்னாள் பழக்கடை உரிமையாளர் - சின்னக்கடை)

உரும்பராய் தெற்கை பிறப்பிடமாகவும் உரும்பராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்டவருமான கந்தையா பாலசுப்பிரமணியம் வவுனியாவில் 19 10-93-ல் அகால மரணமானார். இவர் இன்பராணியின் அன்புக் கணவரும், கங்காசுதன் காயத்திரி (யாழ் கன்னியர்மட ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் உரும்பராய் கிழக்கு விசுவலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் மருமகனும் சிவலோகநாதன் (கனடா), மகேந்திரன் விசயரூபி (சுவிஸ்), கந்தசாமி திரவியராணி (கனடா), அன்ரனி சந்திரலீலா (பிரான்ஸ்), கமலநாதன் கலாராணி ஆகியோரின் மைத்துனரும், சந்திரசேகரம் (ஜேர்மனி), சிவகுருமலர்சோதி, ராசரத்தினம் யோகேஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

தகவல்:
மு. விசுவலிங்கம்

சங்கக்கடையடி,
உரும்பராய் கிழக்கு
உரும்பராய்.
[6343]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது